80—

கிளைகள் அமைத்தல்

***14809—திருமதி எஸ். விஜயதரணி:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்டந்தோறும் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கென கிளைகள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். தமிழ்நாட்டின் முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு மாவட்டந்தோறும் கிளைகள் அமைக்க அரசு முன்வருமா என்று விளவங்கோடு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் வினாவினை எழுப்பியுள்ளார்கள்.

மாவட்டந்தோறும் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு என கிளைகள் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மையின மக்கள் கல்வி, பொருளாதாரம் மற்றும் வேலைவாய்ப்புகளில் முன்னேற்றம் அடையும் விதமாக சிறுபான்மையினர் நலனைப் பாதுகாக்கும் வகையில், மத்தியில் காங்கிரஸ் ஆட்சி செய்தபோது, ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசால் பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டு, இந்தியா முழுவதற்கும்*

2018 மே 29]

*செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டன. சொல்லொணாத் திட்டங்களால், சிறுபான்மையின மக்கள் பல்வேறு வளர்ச்சியினைக் கண்டார்கள். அதுமட்டுமல்ல, அவர்களுக்கு வேலைவாய்ப்பும் அதிகமாக வழங்கப்பட்டது. குறிப்பாக, கிறிஸ்தவ, இஸ்லாமிய சகோதர சகோதரிகளின் வாழ்க்கையில் மேன்மை தோன்றியது. எங்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் வசிக்கும் 20 இலட்சம் பொது மக்களில், சுமார் 12 இலட்சம் பேர், கிறிஸ்தவ, இஸ்லாமிய மக்கள் ஆவார்கள். சிறுபான்மையின மக்களின் கல்வி, உயர் கல்வி, 100 சதவிகித கல்வி உதவித் தொகை-*scholarship *இவையெல்லாம் குறிப்பாக அரசு உதவி பெறும் மற்றும் தனியார் கல்லூரிகளில் பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியர் அனைவருக்கும் மத்தியில் ஆட்சி செய்த காங்கிரஸ்-தி.மு.க. கூட்டணி அரசு வழங்கியது. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கிறிஸ்தவ, இஸ்லாமிய இளைஞர்கள் வளைகுடா நாடுகள் மற்றும் பிற மேலை நாடுகளுக்கு வேலை தேடிச் செல்கின்றனர். அவ்வாறு பிற நாடுகளுக்கு வேலைக்குச் சென்று குடும்பத்தைக் காப்பாற்றி வருகின்றனர்.*

முற்பகல் 11-40

இந்நிலையில், 2014 ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தால், வளைகுடா நாடுகளுக்குப் பணிக்குச் சென்ற கிறிஸ்தவ, இஸ்லாமிய மீனவ இளைஞர்கள் பலரும் இந்தியாவிற்குத் திரும்பி வரவேண்டிய சூழ்நிலை; வெளிநாடுகளில் வேலையில்லாத சூழ்நிலை; நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலைகள் ஏற்பட்டன. ஆகையால், அவர்கள் சொந்த நாடான இந்தியாவிற்குத் திரும்ப வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். பல ஆயிரக்கணக்கான இளைஞர்கள் வேலையின்றி வெளிநாடுகளிலிருந்து கன்னியாகுமரிக்கு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்வி நேரத்தில் சுருக்கமாகப் பேசுங்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *நான் பிரச்சினை என்னவென்று சொல்ல விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பிரச்சினையை விவாதமாகப் பேசாதீர்கள். கேள்வியை மட்டும் கேளுங்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *சரி, நான் கேள்வியை மட்டும் கேட்கிறேன். இந்த ஆயிரக்கணக்கான இளைஞர்கள்*

வேலையில்லாமல் வெளிநாடுகளிலிருந்து திரும்பியுள்ள இந்தச் சூழ்நிலையில், தென் மாவட்டங்களில் ஒன்றான கன்னியாகுமரி மாவட்டத்தில், குறிப்பாக SEZ போன்ற Economic Zone அல்லது தொழிற்சாலைகள் எதுவும் இல்லாத சூழ்நிலையில், அயல்நாடுகளிலிருந்து திரும்பிவரும் இளைஞர்களின் இந்தச் சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, தனி மனித பொருளாதாரம், அவர்கள் குடும்பம், கல்வி, பொருளாதார வளர்ச்சி அடைய, சிறுபான்மையின மக்கள் தொழில் தொடங்க, சிறு வணிகம் மேற்கொள்ள, அவரவர் தகுதிக்கேற்ப ஒரு கோடி ரூபாய் வரை 50 சதவிகித மானியத்தில் தொழில் கடன் மற்றும் வட்டியில்லாமல் சிறு கடன், சிறுபான்மையின மக்களுக்கு வழங்க தனி அமைப்பினை மாவட்ட அளவில் உருவாக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகப் பேசுங்கள் என்று நான் சொன்னால், நீங்கள் கேட்கமாட்டேன் என்கிறீர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: நான் கேள்வியை முடித்துவிட்டேன். முத்ரா வங்கி, பெண்கள் வங்கி, சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் போன்ற சேவை மையங்களை, மாவட்டந்தோறும், வட்டங்கள்தோறும் தாலுகா, வட்டார அளவில் உருவாக்க பரிசீலனை செய்ய இந்த அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள், புத்த மதத்தினர், சீக்கியர்கள், பார்சியர்கள் மற்றும் ஜெயின் பிரிவைச் சார்ந்த மதவழி சிறுபான்மையின மக்களை மேம்படுத்துவதற்காக தனி நபர் கடன், சிறு கடன், கல்விக் கடன் மற்றும் திறன் வளர்ப்புப் பயிற்சிகள், தொழில் சார்ந்த பயிற்சிகள் ஆகியவற்றை வழங்குவதற்காக குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்கும் நோக்கத்துடன் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் நிறுவப்பட்டது. இது 1956 ஆம் ஆண்டு இந்திய நிறுமங்கள்

2018 மே 29]

சட்டத்தின்கீழ் பதிவு பெற்ற ஓர் அரசுத் துறை நிறுவனமாகும். இந்த நிறுவனம் தேசிய சிறுபான்மையின வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்தின் மாநில முகமையாகச் செயல்பட்டு வருகிறது. இக்கழகம் செயல்படுத்தும் பல்வேறு கடன் திட்டங்களுக்கான நிதியை மாநில அரசின் பொறுப்புறுதியின்மீது தேசிய சிறுபான்மையின வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்திலிருந்து கடனாகப் பெற்று வழங்குகிறது. தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழக கடன் உதவித் திட்டம் குறித்த விவரங்கள் அனைத்தும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலுள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் கிடைக்கப்பெறும். மேலும், ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறுபான்மையினருக்கான திட்டங்களைச் செயல்படுத்தும்பொருட்டு ஒரு கண்காணிப்பாளர், ஒரு இளநிலை உதவியாளர், ஒரு தட்டச்சர் அடங்கிய பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில் மாவட்டந்தோறும் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கென கிளைகள் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, நீங்கள் சுருக்கமாகக் கேள்வி கேட்பதாக இருந்தால், உங்களைக் கேள்வி கேட்க நான் allow பண்ணுவேன். இல்லையென்றால், நான் cut பண்ணிவிடுவேன். சுருக்கமாகக் கேள்வி கேளுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சுருக்கமாகவே கேள்வி கேட்டுவிடுகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் 60 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட சிறுபான்மையின பெண்கள், குழந்தைகள் வசிக்கிறார்கள். இவர்களின் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும். ஒட்டுமொத்தமாக, பொருளாதார வளர்ச்சி அந்த இனத்திற்குப் பயன்படும்படி அமையும்விதத்தில், குறிப்பாக சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த பெண்கள் பொருளாதார வளர்ச்சி பெறும்வகையில், அவர்களுக்குத் தேவையான நிதியுதவி, வங்கிகள் மூலமாக மட்டுமல்ல, மானியத் திட்டங்கள்-subsidy schemes மூலமாக, குறிப்பாக, பெண்களுக்கென்று மானியத் திட்டங்கள் தனியாக வழங்கப்பட வேண்டும்.

[2018 மே 29

முற்பகல் 11-45

குழந்தைகளின் நலனைப் பாதுகாக்கும் விதத்தில் அவர்களுக்கு scholarship வழங்கப்படுவதைப் பொறுத்தவரையில், பல நேரங்களில் apply செய்யப்பட்டும், scholarship பலருக்கும் வந்து சேராத சூழ்நிலை இருக்கிறது. பலருக்கும் certificate verification என்ற முறையில் பெரிய அளவில் தாமதப்படுத்தப்படுகிறது. இதையெல்லாம் கண்காணித்து, தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் வாயிலாக பொருளாதார மேம்பாடு மற்றும் வளர்ச்சி மேம்பாடாக ஒட்டுமொத்த சிறுபான்மையினர் வளர்ச்சிக்குண்டான கழகமாக இதை மாற்றியமைத்து இதற்குத் தீர்வு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். நேரம் இல்லை. மானியக் கோரிக்கை வருகிறது. நீங்கள் அதில் பேசுங்கள். கேள்வி கேட்பதற்கு இவ்வளவு நேரமா? இப்படிச் செய்தால் எப்படி? இன்று, இரண்டு மானியக் கோரிக்கைகளின்மீது விவாதம் மற்றும் மாண்புமிகு அமைச்சர்களின் பதில் என்று நிறைய அலுவல்கள் இருக்கின்றன. நெருக்கடியான time. ஒரு கேள்விக்கே இப்படிச் செய்தால் நான் என்ன செய்ய முடியும்? கேள்வியைக் கேளுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த line-ஐ complete செய்துவிடுகிறேன். ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கு உட்படுத்தப்பட்ட ஒரு மேம்பாட்டுக் கழகமாக மாற்றியமைத்து, அதன் பெயரையும் மாற்றம் செய்து, அதற்குண்டான நிதியை வழங்கி செம்மைப்படுத்த வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோளாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் வழங்கக்கூடிய கடன் உதவித் திட்டங்கள், தனி நபர் கடன் உதவி, கறவை மாடுகள் வாங்குவதற்கான கடன் உதவி, ஆட்டோ ரிக்ஷா வாங்குவதற்கான கடன் உதவி, சிறு கடன் உதவி, கல்விக் கடன் உதவி போன்றவையாகும். மேற்காணும் கடன் உதவித் திட்டங்கள் அனைத்தும் குறைந்த வட்டி விகிதத்தில், அனைத்து மாவட்டங்களின் கூட்டுறவுத் துறையின்கீழ் இயங்கி வரும் மத்தியக் கூட்டுறவு வங்கி மற்றும்

2018 மே 29]

அதன் கிளைகள், நகர கூட்டுறவு வங்கி மற்றும் அதன் கிளைகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின்மூலம், கூட்டுறவு வங்கிகளின் விதிகளுக்குட்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழக கடன் உதவித் திட்டங்கள் குறித்த விவரங்கள் அனைத்தும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலுள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் கிடைக்கப்பெறும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு**: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி* (*) *இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

3. தூத்துக்குடி, ஸ்டெர்லைட் ஆலை விவகாரம்-பேரவைத் தலைவரின் சிறப்பு அதிகாரத்தின்கீழ் பேச அனுமதி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் என்ன சொல்கிறீர்கள்? சொல்லுங்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் தூத்துக்குடியில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் 13 பேர் ** செய்யப்பட்டிருக்கிறார்கள். எனவே, அதுகுறித்து ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தை இன்று காலையிலேயே உங்களிடத்திலே தந்திருக்கிறோம். எனவே, இந்த அவையை ஒத்திவைத்து அந்தப் பிரச்சினையைப் பற்றி விவாதிப்பதற்கு நீங்கள் நேரம் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். அதாவது, பொதுவாக ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்புக் கொடுப்பதற்கு*

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*